நரசு
ஸ்டுடியோஸ்

பிரேமபாசம்

நரசு ஸ்டுடியோஸ்

"பிரேம பாசம்"

-*- நடிகர்கள் -*-

ஜெமினி R. கணேசன்	...	*ராமகிருஷ்ணன்*
K. சாரங்கபாணி	...	*ரெத்தினம்*
V. K. ராமசாமி	...	*நாகபூஷணம்*
M. G. சக்கரபாணி	...	*போலீஸ் இன்ஸ்பெக்டர்*
பீர்முகம்மது	...	*நாராயண பிள்ளை*
K. சாயிராம்	...	*மானேஜர்*
K. பாலாஜி	....	*ராதா*
கிட்டன்	...	*பன்ஸிலால்*
Dr. சிவராமகிருஷ்ணன்	...	*டாக்டர் சேகர்*
M. C. ராகவன்	...	*ராம்தாஸ்*
மாஸ்டர் சிவராமன்	...	*பால ராமகிருஷ்ணன்*
மாஸ்டர் பாபுஜி	...	*பால ராதா*

-*- நடிகைகள் -*-

சாவித்திரி	...	*பிரேமா*
கிரிஜா	...	*தாரா*
முத்துலக்ஷ்மி	...	*தங்கம்*
K. வரலக்ஷ்மி	...	*பார்வதி*
பேபி சரஸ்வதி	...	*பால பிரேமா*
பேபி கிருஷ்ணவேணி	...	*பால தாரா*

வசனம், பாடல்கள்	...	***தஞ்சை ராமய்யாதாஸ்***
சங்கீத டைரக்ஷன்	...	**S. *ராஜேஸ்வரராவ்***
நடன அமைப்பு	...	***வழுவூர் ராமய்யா பிள்ளை*** ***பசுமர்த்தி கிருஷ்ணமூர்த்தி***
நடனம்	...	**E. V. *சரோஜா, பாலா***

"பிரேம பாசம்"

●

கதைச் சுருக்கம்

○

தனவந்தரான நாராயண பிள்ளை, தாயை இழந்த கன்றுகளான தன் இருகுழந்தைகள் பிரேமா, தாராவை, கண்ணுங்கருத்துமாய் வளர்த்து, வருங்காலத்தில், தன் குழந்தைகள் கலை உலகிலேயே நிகரற்ற நாட்டிய ராணிகளாகத் திகழவேண்டுமென்ற ஆவல் கொண்டு, அதற்காகவே, ஒரு கலையரங்கமும் நிறுவினர். சிறிது காலத்தில், குழந்தைகளுக்கு நடனம் பயிற்றுவித்து, அரங்கேற்று விழாவும் அதி விமரிசையாக நடத்தினர். அவ்விழாவில் கலந்துகொண்டவர்களில், நாகபூஷணத்தின் மகன் ராமுவும் ஒருவன். ராமுவுக்கு பிரேமாவிடம் அளவுகடந்த அன்பு. ஒருநாள் ராமு பள்ளிக்குச் செல்லுகையில் வழியில் ஒரு குறத்தியின் பாடல் ஆடலில் சொக்கி, தன் கையில் பச்சை குத்துமாறு வேண்ட, அவளும் "ராமு" என்று அவன் பெயரையே கையில் குத்தி விடுகிருள். இதைக் கண்ணுற்ற பிரேமா நாகபூஷணத்திடம் தெரிவிப்பதாகச் சொல்லவே வேண்டாமென்று மன்ருடுகிருன். பிரேமா வேகமாக வீட்டிற்குச் சென்று மானேஜரான நாகபூஷணத்தினிடம் சொல்கிருள். கோபங்கொண்ட ராமு பிரேமாவை அறைந்து கீழே தள்ளுகிருன். மாடியிலிருந்து விழுந்த பிரேமாவுக்கு கால் ஒடிந்து விடுகிறது. பக்கம் இருந்த நாராயணப் பிள்ளை பதறித் துடிதுடித்து, தன் கற்பனைக் கோட்டையை இடித்துத் தள்ளிவிட்டானே பாவி, என்று ஆத்திரத்துடன் ராமுவை துரத்திச்சென்று கையிலிருந்த

பிஸ்டலால் சுட்டு வீழ்த்தி விடுகிறார். ராமு ஐயோ, என்று அலறியவாறு ஆற்றில் விழுந்து விடுகிறான். இச் சிறு குற்றத்திற்காக பச்சிளங்குழந்தையைச் சுட்டு வீழ்த் திய நாராயண பிள்ளையை பழிக்குப்பழி வாங்கத் திட்ட மிடுகிறான் நாகபூஷணம்.

நாராயண பிள்ளையின் வாழ்க்கையில் கடும்புயல் வீச ஆரம்பிக்கிறது. கலைஞன், கொலைகாரனாக ஆகி விடுகிறான். போலீஸுக்குப் பயந்து குழந்தைகளையும் சொத்தையும் நாகபூஷணத்தினிடமே ஒப்படைத்து, தலைமறைவாய்த் திரிகிறார்.

காலத்தின் வேகத்திலே நாட்கள், மாதங்கள், வருஷங்கள் பல ஓடி மறைந்துவிட்டன. குழந்தைகள், குமாரிகளாகிவிட்டார்கள். இவர்கள் வாழ்க்கையில், கல்கத்தா ஜெயிலில் இருந்து விடுதலை பெற்ற கைதி ஒருவன் குறுக்கிடுகிறான். வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும், கள்ளங் கபடமற்ற பிரேமாவின் உள் ளத்தில் இடம் பெற்றுவிடுகிறான் அவன். தன் குடும் பத்தைக் காப்பாற்ற வந்த கண்ணனாகவே கருதி உப சரித்தாள் பேதை பிரேமா. தங்க இடமும் உண்ண உணவுமளித்தாள்.

ஆனால் அடைந்த பலன் என்ன ?

அடைக்கலம் என்று விட்டுச் சென்ற நாராயண பிள்ளையின் அருமைச்செல்விகளை அற்பன் நாகபூஷணம் என்ன செய்தான் ?

கொலைகாரனான நாராயண பிள்ளையின் கதி என்ன?

கைதி யார் ? குற்றவாளி யார் ? நிரபராதி யார் ?

பிரேமா, தாரா, என்ன ஆனார்கள் ?

என்பதெல்லாம் வெள்ளித் திரையில் காண்க !

பாட்டுகள்

பாடல்கள் இயற்றியவர்: *தஞ்சை ராமய்யாதாஸ்*

[1]

[ராதா & கிருஷ்ணு] பாடியவர்:
ஜிக்கி, ராணி & கோஷ்டி

ராதா: நந்தகுமாரா மாதவா
நலமே அருள்வாய் கேசவா
பிருந்தாவனமே வாராய் தேவா.... (நந்த)

கிருஷ்ணன்: வளர்மதி நீயே ராதா ராணி
வான்முகில் நானே எழில் ரமணி

ராதா: வனமாலி ஜெகன் மாயாவதாரா—ஏ
மாயாவதாரா!

கிருஷ்: கனிந்திடும் பிரேமைக் கனியே இப்புவிமேல்

இருவர்: காவியம் புகழும் ஓவியம் நாமே

கோபியர்: கண்ணன் திருநாள் இன்றே—அதனல்
அன்பின் அலை மோதிடும் யமுனு நதி தீரத்திலே
குழலிசை மேவிடும் நேரத்திலே
மனோகரமாய் மகிழ்ந்திடவே
மனம் கனிந்தே புகழ்ந்திடவே
நம் சேல்விழியால் செந்தேன் மொழியால்
கண்ணன் மனம் கவர்ந்திட வாரீரோ!
மறைவிலிருந்தே நாடகமாடிய
மதுசூதன் இவன்தாண்டி—கண்ணனை
மாதவன் இவன்தாண்டி—நம் கோபியர்
மனந்தனைக் கவர்ந்தாண்டி!

ராதா: இசை கானமுதே இன்பத் தேனமுதே—இந்த
மாயா ஜாலமே நானறிவேன்—உங்கள்
மாயா ஜாலமே நானறிவேன்

கிருஷ் : ஏனோ ராதா இன்ப கானத்தில்
யாருமே அடிமை அறியாயோ ?

கோபியர் : இகபர சுகமுர மலர்பதமே பெற
என்னாளும் உன்னை மறவோமே,
எங்கள் கண்ணாளா உன்னை மறவோமே !
வேதாந்தச் செல்வமே ஏகாந்த இன்பமே
விண் மேவும் நீல வர்ண கண்ணான தெய்வமே
விண்மணியே கண்மணியே,
உன்னையல்லால் பாரிலே
வேறு துணை யாருமில்லை கோபியரின் வாழ்விலே
(வேதாந்த)

[2]

[குறத்தி]

பாடியவர் :
ஜிக்கி

ஓ...அம்மே ... ... ஓ....அய்யே !
எங்க ஊரு சிங்கப்பூரு தில்லாலே லேலோ !
இப்போ இருப்பதெல்லாம் தஞ்சாவூரு—
தில்லாலே லேலோ – மாமா
தில்லாலே லேலோ – மச்சான்
தில்லாலே லேலோ... (எங்க)

ஓ... ஓ... ... ...
ஏரைப் பிடிச்ச மச்சானே எருது பச்சை குத்திக்குங்க...
காரைப் பிடிச்ச அத்தானே காக்காப் பச்சை குத்திக்குங்க—
சூரவல்லி குத்தர பச்சை
ஜோராகவே இருக்குங்க ! (எங்க)

ராஜா பச்சை வேணுமா – ராணி பச்சை வேணுமா...
கூஜா பச்சை வேணுமா – குரங்குப் பச்சை வேணுமா
கூசாம கையை நீட்டுங்க—ஓ.. அம்மாவே
அய்யாவே—சும்மா வாங்க !
பேரு ஊரையும் பிறந்த நாளையும்
பின்னல் சங்கிலி போலே பிசகாமக் குத்திடுவேன்

ஆதி பார்வதி ஜாதி நானுங்க...
ஆனைமுகம் ஆறுமுகம் ஆணையாகச் சொல்லிடுவேன்
சாமி ஆணையாகச் சொல்லிடுவேன்...
அச்சுப் புள்ளி அழியாம— அ... ஆ......
கச்சிதமாய்க் குத்திடுவேன்—பச்சை
கச்சிதமாய்க் குத்திடுவேன் (எங்க)

[3]

[ராம்தாஸ்—பிரேமா]

பாடியவர் :
P. B. ஸ்ரீனிவாஸ் & P. லீலா

தொகையரு :

ராம்தாஸ் : ஹரேமுராரி ஹேசக்ரதாரி, அபயம் நீயே
காலச் சூருவளியில் சிதறிய மலர் போலே
கலங்குவதும் முறைதானு
கண்ணு எல்லாம் உன் லீலைதானு...

பாட்டு

அணைத்தாலும் நீயே, அடித்தாலும் நீயே
அன்னையும் நீயே தந்தையும் நீயே
அருள் புரிவாயே – கிருஷ்ணஹரே—ஸ்ரீ
கிருஷ்ணஹரே !!
கிருஷ்ணஹரே ஜெய் கிருஷ்ணஹரே
கிருஷ்ணஹரே ஜெய் கிருஷ்ணஹரே !!

ப்ரேமா : கண்ணிலே விளையாடும் கண்ண பரமாத்மா
வண்ணமுகில் ஜோதியே கண்ண பரமாத்மா
கிருஷ்ணஹரே ஜெய் கிருஷ்ணஹரே
கிருஷ்ணஹரே ஜெய் கிருஷ்ணஹரே !!
கனவிலும் மறவாமல் உனை நினைந்தேனே
உள்ளம் மகிழ்ந்தேனே
கவலையைத் தீராயோ – கண்ண பரமாத்மா
காத்தருள் புரிவாயோ – கண்ண பரமாத்மா
கிருஷ்ணஹரே ஜெய் கிருஷ்ணஹரே
கிருஷ்ணஹரே ஜெய் கிருஷ்ணஹரே !!

ராம்தாஸ் ... ... (அணைத்தாலும் நீயே)

[4]

[பிரேமா]

பாடியவர் :
P. லீலா

தொகையரு

ஓ ! வெண்ணிலாவே...விண்ணூரும்
வெண்ணிலாவே... ... ... !

வீசும் தென்றலிலே... பேசும் வெண்ணிலவே
—கதை பேசும் வெண்ணிலவே
உன்னாலே - வாழ்வில் இன்புறவே
தேசுலாவும் நீலவானில்
திகழும் வெண்ணிலவே – மகிழும் வெண்ணிலவே (வீசும்)

மாசுலாவும் மேகத்திரையால்
மறைந்து பார்க்காதே—சந்திரா
மனதைக் கேட்காதே
தேசுலாவும் நீலவானில்
திகழும் வெண்ணிலவே – மகிழும் வெண்ணிலவே (வீசும்)

அல்லி மலரின் அமுத கலையே
உள்ளம் உறங்காதே—என்
செல்வம் உறங்காதோ...
தேசுலாவும் நீலவானில்
திகழும் வெண்ணிலவே – மகிழும் வெண்ணிலவே (வீசும்)

[5]

[பிரேமா]

பாடியவர் :
P. லீலா

முரளீதரா ஹரே மோஹன கிருஷ்ணா—என்
குறை கேளடா ஹரே கோகுல கிருஷ்ணா ! (முரளீதரா)

நிதியோடு நான் வாழ்ந்த நிலை காணுமா
அந்த நிலை காணுமா ?
நினைவேதான் கானல் நீராகுமா—கானல்
நீராகுமா

நீயின்றி என் வாழ்வில் ஒளி வீசுமா
நேராகவே ஓடி வாராய் என் கண்ணே (முரளீ)

உனக்காக மனக்கோயில் உருவானது
உடல் ஆவி பொருள் யாவும் உனைச்சேர்ந்தது
அதை நினைக்காமல் இனிமேலும் மறையாதேடா
நேராகவே ஓடி வாராய் என் கண்ணே (முரளீ)

[6]

[கிருஷ்ணன், பிரேமா] பாடியவர் :
கண்டசாலா & P. லீலா

கிருஷ்ணன் : வீசும் தென்றலிலே
பேசும் வெண்ணிலவே—என் வாழ்வில்
ஜோதி அன்புறவே
அழகு தாரகை மாலே சூடும்
அன்னம் உறங்குதடா—என்
எண்ணம் நெருங்குதடா... (வீசும்)

காவில் விளையாடும்...என்னுளும்
காதலாலே கவிதை பாடும்
கண்கள் உறங்கையிலே
கனவைக் கலைக்காதே! .... ஏன் ?
அழகு தாரகை மாலை சூடும்
அன்னம் உறங்குதடா—என்
எண்ணம் நெருங்குதடா... (வீசும்)

பிரேமா : மாலையாலே மனதைக் கவர்ந்து
மறைந்து போகாதே—மாரன்
மலரைத் தூவாதே
தேசுலாவும் நீல வானில்
திகழும் வெண்ணிலவே
மகிழும் வெண்ணிலவே (வீசும்)

[கோரஸ்]

பாடியவர் :
P. லீலா & கோஷ்டி

பாரத நாடு – ஜெய பாரத நாடு—எங்கள்
பாரத நாடு...
பார்தனிலே பெரும் வீரத்தியாகிகளை
பண்புடன் தந்தது இன்புறவே... (பாரத)

பதவி என்றதோர் பட்டம் வானில்
பறந்து செல்வது எதனாலே ? ... மக்கள்

உதவி என்றதோர் நூலைக் கொண்டு
உயர்ந்து செல்லும் அதனாலே !

நாட்டினிலே நமதாட்சியிலே—நாம்
நன்மையைக் கண்டது எதனாலே ?

எட்டினிலும் மறையாமல் விளங்கிடும்
ராட்டினம் சுற்றிய நிலையாலே !

காருண்யமூர்த்தியாம் காந்தியெனும் புதையலை
கண்யமுடன் தந்த நாடு

காசினியில் நேரெவரும் இல்லாத நேருவை
கண்களெனக் கண்ட நாடு

கற்பனைச் சிகரமாம் ராஜாஜி என்றதோர்
கலைமணியைத் தந்த நாடு

கம்பனோடு அவ்வையும் கவிபாரதியும் இன்ப
காவியம் தந்த நாடு !

திருக்குறள் அமுதீந்த திருவள்ளுவரென்ற
அருட்கவியைத் தந்த நாடு

சிறந்த திருநாடு ! பரந்த திருநாடு !!
ஜெகந்தனில், மகிழ்ந்தது
சுதந்திரம் நிறைந்தது... (பாரத நாடு)

[8]

[பிரேமா] பாடியவர் :
P. லீலா

என் வாழ்வும் இதானு
இன்ப வாழ்வும் இதானு
எழில் வான வில், நிலே மாறிடும்—வெறும்
கானல் நீர்தானு ...? **(என் வாழ்வும்)**

மன ஊஞ்சலில் விளையாடும்
தெய்வம்போல் உனே நானே—தினம்
தியானம் செய்தேனே—அந்த
தியாகமும் உந்தன் ஸ்நேகமும்—இனி
யாவும் பொய்தானு... **(என் வாழ்வும்)**

துன்பம் யாவுமே இன்ப வாசலில்—மின்னும்
ஜோதியாகாதா எந்தன் சோகம் தீராதா
அன்பின் ஆழியில் அலே மோதிடும்—உள்ளம்
அமைதி காணுதா, எனதாவலும்
நிறைவேறிட, அவன் துணேயும் நேராதா **(என் வாழ்வும்)**

[9]

[ராம்தாஸ்] பாடியவர் :
P. B. ஸ்ரீநிவாஸ்

(தொகையரு)

அவனல்லால் புவிமேலே அணுவும் அசையாது

பாட்டு

அவனல்லால் புவிமேலே அணுவும் அசையாது
ஓர் அணுவும் அசையாது

அலேகடல் மேவும் துரும்பதைப் போலே
அமைதியும் இல்லாது—வீணில்
அஞ்சுதல் கூடாது—யாவும்
ஆண்டவன் லீலே இது... **(அவனல்லால்)**

மாறி மாறிவரும் சகட வாழ்விலே
மனமே மயங்காதே—நீ
இனிமேல் தயங்காதே—நிலை
மாறி மாறிவரும் சகட வாழ்விலே
மனமே மயங்காதே—நீ
இனிமேல் தயங்காதே—அந்த
மாதவன் அருளாலே—விதி சோதனை
மேவும் – வேதனை யாவும் – தீர்ந்திடும் தன்னாலே
பரந்தாமனின் கண்ணாலே—இனி
பாலைவனமே சோலைவனமாய்
பகவான் அருளாலே—காணும்
சுகமே – இனிமேலே... (அவனல்லால்)

[10]

[தங்கம் & ரெத்னம் காமிக்] பாடியவர்:
சீர்காழி கோவிந்தராஜன் & ஜிக்கி

ரெத்னம்: கும்தளகும்மா, குமாய்க்காதே நீ
கோதுமை அல்வாவே
குஷி தந்திடும் ஜருதாவே (கும்தள)

தங்கம்: பைஸா, பைஸா பைஸா...ஆ
பைஸா பாபர் நைஸா ஆவ்வர் பண்ணுதே ஜிப்பி
நமக்குப் போட்டுடாதே தொப்பி...
ரத்தினமாமா என்னைச் சுத்திடலாமா ?

ரெத்னம்: காரிலேறியே டூரடிக்கலாம்
கல்கத்தாபோய் கப்பலேறலாம்
டில்லி செல்வோம் விமானம் மேலே
சல்லி தீர்ந்ததும் மதருஸ் வருவோம் (கும்தள)

தங்கம்: தம்பிடி நாஸ்தி தடபுடல் ஜாஸ்தி
தாஜா பண்றே பொட்லர் ராஜா
கம்பி நீட்டினாலும் கையில் காசு ரொம்ப வேணும்
போடு..பைஸா...பைஸா..

ரெத்னம் : மந்திரத்தாலே மாங்கா தேங்கா
குட்பால் போலே எகிறி குதிக்கும்
மனசால் நினைச்சா மழையாப் பொழியும்
கலகல கலகல கலா கலா

தங் : என்ன ?

ரெத் : காசு...பணம்...!
மனசால் நினைச்சா மழையாப் பொழியும்
மாமன் வீட்டு ரொக்கம், இன்னும் ஏண்டி இந்த [வெட்கம்?

தங் : வானமீனுக்குத் தூண்டியைப்போட்ட
வந்து மயங்காதே – பொட்லர்
வாடி வதங்காதே – வக்கணையாகப் பேசிடாதே
எங்கே ரொக்கம் – இருந்தா சொர்க்கம்
ரெத்தின மாமா

ரெத் : கும்தள கும்மா

தங் : ரெத்தின மாமா

ரெத் : தங்கமே தங்கம்

தங் : மாமா !

ரெத் : ஆமா !!

[11]

[பிரேமா]

பாடியவர் :
P. லீலா

பெண்ஜென்ம மிதானு, நான் பிறந்ததும் வீணு
இந்தப் பேதையின், வாழ்நாளெல்லாம்
கண்ணீர்தானு...?

ஜெகமெங்குமே, தீபாவளி திருநாளின்றுநானே
இருள் சூழ்ந்து நின்றேனே

உயிரான எனது தந்தை அன்று மறைந்ததினாலே
உடலான எனது தங்கை—தன்
பேதைமையாலே—என்னையே பிரிந்ததினாலே
துணையான எந்தன் காதலனும்
ஏகியதாலே—சிறை—ஏகியதாலே (ஜெகம்)

எந்தன் மாளிகையின் வாழ்வு எல்லாம் இழந்தேனே
நிலைமாறிப்போனதாலே
தனிமரத்தைப் போலே—நானே
அனல் மேவும் மெழுகு போலவே
அலைமோதி நின்றேனே—என
தாவல் மின்னலானதாலே
அபலையாகினேனே......
என்னையாதரிப்பவர் உலகிலே
இனி யாருமில்லையா
மனவேதனையானேன்—குறையே
கேட்பவரில்லையா ?
இந்த ஏழை வாழ இவ்வுலகில்
இடமும் இல்லையா, ஓரிடமும் இல்லையா ? (ஜெகம்)

● ○ ●

சுபம் !

நாதன்ஸ் பிரஸ், சென்னை - 2

பின்னணி பாடகர்கள்	..	கண்டசாலா, P. B. ஸ்ரீநிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன் P. லீலா, ஜிக்கி, ராணி
ஒளிப்பதிவு	...	மஸ்தான் வேதாந்தம் சித்தானந்தம்
ஒலிப்பதிவு		K. ராமச்சந்திரன் K. R. ராமஸ்வாமி
எடிட்டிங்	...	R. ராஜகோபால்
ஆர்ட் டைரக்ஷன்	...	பிரசாத்
ஸ்டில்ஸ்	...	R. P. சாரதி
மேக்கப்	...	M. ராமசாமி, R. ரெங்கசாமி
உடை	...	P. பொன்னுசாமி
புரடக்ஷன் மானேஜர்	...	K. பாலாஜி
அஸோஸியேடட் டைரக்ஷன்		G. கேசவராவ்

டைரக்ஷன் : வேதாந்தம் ராகவய்யா

தயாரிப்பு :

V. L. நரஸு

-: உதவியாளர்கள் :-

வசனம், பாடல்கள், டைரக்ஷன்	...	K. ராமு
ஒளிப்பதிவு	...	C. டோமினிக், T. V. S. மணி N. R. ஜெகதீசன்
ஒலிப்பதிவு	...	A. ஜெகன்னாதன் N. V. சேஷன் A. P. ஆறுமுகம்
எடிட்டிங்	...	B. கோபால்
மேக்கப்	...	N. R. தேவ், M. சுந்தரம்
உடை	...	S. K. தாவுத்
ஸ்டில்ஸ்	...	S. கண்ணப்பன்
ஆர்ட்	...	C. நாராயணன்
புரடக்ஷன்	...	N. ராமூர்த்தி